மலர் 10 கார்த்திகை — மார்கழி இதழ் 7, 8

# வெற்றிமணி

சிறுவர் மாத இதழ்



கௌரவ ஆசிரியர் :
குரும்பசிட்டி மு. க. சுப்பிரமணியம்

வாசக நேயர்களுக்கு
எமது நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.

1-12-72 விலை சதம் 35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுட்டிக் குழந்தை

சுட்டிக் குழந்தை — என்ன
சுட்டிக் குழந்தை ...

கொட்டிக் குதிப்பான் — அவன்
கும்மாளங் கேளாய்.

கொம்பை ஒடிப்பான் — ஒரு
கோதண்டம் செய்வான்.

அம்பு வடிப்பான் — வீட்டில்
அமர்களஞ் செய்வான்.

தேசீயக் கொடிகள் — கட்டச்
சேலையைக் கிழிப்பான்.

பாசறை யமைப்பான் — வீட்டுப்
பழந் துணியாலே.

— கவியோகி சுத்தானந்த பாரதியார்

★★

## நாவலர் நீதி வாக்கியங்கள்

அறிவும் அதனுல் ஆகிய நற்குண நற்செய்கைகளும் உள்ள சான்ஞேர்களாலே நன்கு மதிக்கப்படுதற்கு யோக்கியனுய் இரு.

நீ பிறர்க்குச் செய்த உபகாரங்களை நீயே எடுத்துப் புகழ்தல் தக்கது அன்று.

அடக்கம் உடைமை பாவியர்களுக்குச் சிறந்த ஆபரணம்.

நாம் செல்வத்தையும் உபசரிக்கப்படுதலையும் நம்முடைய பிரீதிக்கு மாருக இழத்தல் கூடும்; நல்லொழுக்கத்தையோ அப்படி இழத்தல் கூடாது.

சுசியுடைமை சரீரத்திற்கு ஆரோக்கியத்தையும், மனசுக்கு இதத்தையும் வளர்விக்கும்.

நீ பிறர்க்கு ஒன்றை வாக்குத்தத்தம் செய்யுமுன், அது உன்ஞல் இயலுமோ இயலாதோ என ஆராய்ந்துகொள்.



கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

# வெற்றிமணி

### ஆலோசகர் குழு

இரசிகமணி கனக. செந்திநாதன்

வி. கந்தவனம் B. A.

ஏ. ரி. பொன்னுத்துரை B. A.

காரை. செ. சுந்தரம்பிள்ளை

—※—

கடந்த பத்து ஆண்டுகளாக
வெளிவரும்
ஈழத்துச் சிறுவர் மாதப்
பத்திரிகை.

### விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| வெளி அட்டை | ரூபா | 75-00 |
| உள் அட்டை | ரூபா | 60-00 |
| முதற் பக்கம் | ரூபா | 50-00 |
| உட் பக்கம் | ரூபா | 40-00 |

தொடர்ந்து விளம்பரஞ்செய்யின்
15 வீதக் கழிவுண்டு.
விபரங்களுக்கு எமக்கு எழுதுக.

### வருடச் சந்தா

பொங்கல் மலர்
தபாற் செலவுட்பட

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா | 5-00 |
| இந்தியா | ரூபா | 6-00 |
| மலாயா | $ | 5-00 |


**வெற்றிமணி**
253 1/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (இலங்கை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— வெற்றிமணி —

வெற்றிமணி டாண் எனவேவிண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள்மொழி நலமுற ஒலித்திடுவாய்

| மலர் 10 | 1-11-72 — 1-12-72 | இதழ் 7, 8 |
|---|---|---|

## வேண்டுகின்றேம்

அச்சடிப்பதற்குரிய கடதாசித் தட்டுப்பாடு காரணமாகக் கார்த்திகை மாத வெற்றிமணி வெளியிடப்படவில்லை. இதற்காக வெற்றிமணி நேயர்களிடம் மன்னிப்பு வேண்டுகின்றேம். கார்த்திகை மார்கழி இதழ்கள் ஒன்ருக வெளியிடப்படுகின்றன.

க. பொ. த. பரீட்சை எடுக்கும் மாணவர்கள் 1972 ஆனி, ஆடி, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை - மார்கழி வெற்றிமணிகளில் முறையே வெளிவந்த நான் விரும்பும் நூல் - திருக்குறள், நான் விரும்பும் பெரியார் - ஆறுமுக நாவலர், நான் விரும்பும் தொழில் - ஆசிரியத் தொழில், தொழிலின்மைப் பிரச்சினை. தொழில் முன்னிலைக் கல்வி கட்டுரைகளை வாசித்தால் பரீட்சைக்கு உதவியாக இருக்கும்.

தொடர்ந்து ஒவ்வொரு மாத இதழிலும் வியாசக் கட்டுரைகளை திரு. வி. கந்தவனம் பி.ஏ. அவர்கள் எழுதுவார்கள்.

கடதாசி விலை, அச்சுச் செலவு கூடினுலும் வருடச் சந்தாவைக் கூட்ட விரும்பவில்லை. இதுவரை சந்தா அனுப்பாத நேயர்கள் 1972 மார்கழி முடிவுள்ள சந்தாவை அனுப்புவதுடன் புதிய சந்தாதாரர்களையும் சேர்த்து உதவுமாறு வேண்டுகின்றேம்.

— ஆசிரியர்

* *

# உங்களைப் பற்றி

— நந்தி —

## 9

சென்ற வருடம் யாழ் குடாநாட்டில் ஒரு பிரசித்திபெற்ற கோவிலுக்குப் போனேன். அங்கே குருக்களிடம் கேட்டேன் ''ஐயா, திருவிழா எத்தனை மணிக்கு?'' என்று. ''சொல்லமுடியாது'' என்றார் அவர். ''ஒரு மணி அளவில் பூசை ஆரம்பமாகுமா?'' என்றும் கேட்டேன். ''சொல்லமுடியாது'' திரும்பவும் அதே பதில்தான். நான் உடனடியாக நல்லூர் திரும்பிவிட்டேன். இப்படியான நேரம் தெரியாத சுவாமி விழா எனக்குச் சரிவராது. இந்தக் காலத்தில் நமக்குப் பல வேலைகள் உண்டு. எதற்கும் ஒரு கால நேரம் வேண்டும். அல்லாவிடில் நமது வேலைகளை ஒழுங்காகச் செய்ய முடியாது.

சரியான நேரத்திற்குப் பூசையும் விழாவும் நடப்பதில் பிரசித்திபெற்ற தலம் நல்லூர் கந்தசுவாமி கோவில். அதனுலேதான் பொறுப்பான வேலை பார்ப்பவர்களும் இக்கால இளைஞரும் அந்தக் கோவிலை ஆதரிக்கிறார்கள். ஒவ்வொருவரும் தமது நெருக்கடியான வேலைகளை கோவில் தொழுகைக்கு அமைய ஒழுங்கு செய்ய முடிகிறது. இந்தக் காலத்திலே கோவில் பழக்கத்தில் நேர ஒழுக்கமும் ஒன்று என்று நம்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நண்பர் ஒருவர் கூறினூர்: ''சைவ சமயம் இயற்கையோடு இயைந்த சமயம். இப்படி நேர அட்டவணை (Time Table) போட்டு கும்புடுவது செயற்கையான செயல்'' என்று. எனக்கு இந்த விளக்கம் சரி எனத் தோன்ற இல்லை. இயற்கை கால நேரத்திற்கு அமைந்து ஒழுகுவது ஆகும். சூரிய உதய உச்ச அஸ்தமனம், கிரகங்களின் காலச் சக்கரம் எல்லாம் ஒரு விநாடி கூடத் தப்பாமல் நடைபெறுகின்றன. மரம் செடி கொடி பூக்கள், பறவைகள், விலங்குகள் எல்லாம் கால நேரத்தை அனுட்டிக்கின்றன. ஆகவே இயற்கை தந்த சைவ சமய வழிபாடுகள் நேர அட்டவணைக்கு நடப்பதுதான் முறை ஆகும்.

தங்கைச்சி...... வீட்டில்கூட கடவுள் வழிபாட்டுக்கு ஒரு நேரம் இருக்க வேண்டும். நாம் எந்த நேரமும் வழிபட வேண்டியது இல்லை. நாம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கடவுளை வழிபட்டுப் பெற்ற சக்தி நமது உள்ளத்தில் சுவறி அன்று முழுதும் வழி நடத்தும். அந்தச் சக்தி இமைப்பொழுதும் எமது நெஞ்சை விட்டு நீங்காது.

நாம் குறிப்பிட்ட நேரங்களில் உணவு அருந்துகிறோம்; பின்பு அதைப்பற்றி யோசிப்பது இல்லை. உணவு உடலில் சீரணமாகி உடலுக்குச் சத்தி தரும்; அதையும் நாம் சிந்தித்துக்கொண்டு இருப்பது இல்லை. அப்படி யோசித்தால், நாம் மற்ற வேலைகளைச் சரியாகச் செய்ய முடியாது. அதே



போலத்தான் கடவுள் வழிபாடு. நல்ல சிந்தனைகள் மூலம் உள்ளத்திற்கு உணவு கொடுத்தால் அது சீரணமாகி உள்ளம் பலமும் பக்குவமும் அடையும்.

சிலர் சாமி அறையில் இருந்தோ, கோவிலில் இருந்தோ வெளியே வந்ததும் மற்றவர்களை நிந்திக்கிறார்கள், தகாத செயல்கள் செய்கிறார்கள், பிறருக்கு உதவ மறுக்கிறார்கள். இதன் அர்த்தம் என்ன? அவர்களின் வழிபாடு சீரணிக்க இல்லை. அவர்களுக்கு உள்ளத்தில் சமியாக்குணம் ஏற்பட்டு இருக்கிறது. நாம் கடவுளை வழிபடும்போது உள்ளத்திற்கு நல்ல உணவு தரவேண்டும். அன்பு, நட்பு, ஊக்கம், ஒற்றுமை உணர்வு, தியாக சிந்தனை இவைதாம் நல்ல உணவுகள். கடவுள் வழிபாட்டில் இவை இருப்பின் உள்ளம் புனிதமாகவும் திடமாகவும் இருக்கும். கெட்ட எண்ணங்கள் பழுதுபட்ட உணவுக்கும் மதுபானத்திற்கும் சமம் ஆகும்.

இனி, கடவுள் வழிபாட்டில் நேர ஒழுக்கம் இருப்பதுபோல, உங்கள் நாளாந்த எல்லா வேலைகளையும் செய்வதற்கு நேர அட்டவணை இருக்க வேண்டும். பாடசாலையில் இருப்பதுபோல் வீட்டிலும் ஒரு நேர அட்டவணை இருக்கலாம்தானே!

தம்பி...... தங்கைச்சி...... காலையில் எழுவதற்கு, காலைக் கடன்களைப் புரிவதற்கு, கடவுள் சிந்தனைக்கு, சாப்பாட்டிற்கு, படிப்பதற்கு, விளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாடுவதற்கு, பிறருக்கு உதவுவதற்கு, நித்திரைக்கு — இப்படி எல்லாவற்றிற்கும் ஒரு நேர அட்டவணை போட்டு நீங்கள் வாழவேண்டும். உலகில் முன்னேறுவதற்கு இது ஒரு சிறந்த வழியாகும்.

**சுருக்கம் :-**

கோர்வில் பழக்கம் (vii) நேர ஒழுக்கம்.

# தொழில் முன்னிலைக் கல்வி

வி. கந்தவனம் B. A,

கல்வி அமைச்சினுற் புதிதாகத் தயாரிக்கப்பட்ட கல்வித் திட்டத்திலே தொழில் முன்னிலைக் கல்வி முக்கியத்துவம் பெறுகின்றது. புதிய கல்வித்திட்டம் 1972ஆம் ஆண்டு முதல் 6ஆம் தரத்திலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது. இப் புதிய திட்டத்திற் கற்பிக்கவேண்டிய பாடங்களும் அவற்றுக்கு ஒதுக்கப்படவேண்டிய பாட நேரங்களும் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | முதல் மொழி ... ... ... ... ... | 5 |
| 2. | இரண்டாம் மொழி ... ... ... ... | 6 |
| 3. | கணிதம் ... ... ... ... ... ... | 6 |
| 4. | விஞ்ஞானம் ... ... ... ... ... | 4 |
| 5. | சமூகக் கல்வி ... ... ... ... ... | 4 |
| 6. | கவின்கலைக் கல்வி ... ... ... ... | 3 |
| 7. | சுகாதாரமும் உடற்பயிற்சிக் கல்வியும் | 3 |
| 8. | சமயம் ... ... ... ... ... ... | 2 |
| 9. | தொழில் முன்னிலைக் கல்வி I | 7 |
| 10. | தொழில் முன்னிலைக் கல்வி II | |

இவ் விவரம் தொழில் முன்னிலைக் கல்விக்கு அதிக பாட நேரங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதைக் காட்டுகின்றது. இதிலிருந்து தொழில் முன்னிலைக் கல்விக்கு அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் நன்கு புலனுகும்.

தொழில் முன்னிலைக் கல்வி என்பது தொழிலுக்கும் அன்றுட வாழ்வுக்கும் பயன்படக்கூடிய திறமைகளைப் பயிற்றுவதாகும். தொழிற் கல்வி வேறு; தொழில் முன்னிலைக் கல்வி வேறு. தொழிற் கல்வி என்பது ஒரு தொழிலைப் பயிற்றுதலாகும். தொழில் முன்னிலைக் கல்வி என்பது ஒரு தொழிலை முறையாகக் கற்பதற்கு முன்னதாக அத் தொழிலைப்பற்றிய சில அடிப்படை அறிவை அளித்தலும் ஆர்வத்தை வளர்த்தலும் திறமைகளைப் பயிற்றுவதுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் தொழில் முன்னிலைக் கல்வி இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தொழில் முன்னிலைக் கல்வி I ல் கமம், வணிகம், மனையியல், மரவேலை, உலோகவேலை, மட்பாண்ட வேலை, நெசவு என்பன அடங்கும். தொழில் முன்னிலைக் கல்வி II ல் அவ்வப் பிராந்தியங்களில் நடைபெற்றுவரும் பிரதான தொழில்கள் பயிற்றுவிக்கப்படும். உதாரணமாக யாழ்ப்பாணப் பகுதியில் பனையோலை கொண்டு பெட்டி, கடகம், பாய், முதலியன இழைத்தல். இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினக்கற்றொழில், கரையோரப் பகுதிகளில் மீன்பிடித் தொழில், தென்னந் தோட்டங்கள் அதிகமுள்ள பகுதிகளில் தும்புத்தொழில் போன்ற உள்ளூர்த் தொழில்கள் இப்பிரிவில் இடம்பெறும்.

இத் தொழில்களைப் பிள்ளைகளுக்குப் பழக்குவதன்று தொழில் முன்னிலைக் கல்வியின் நோக்கம். இவற்றைப் பின்னணியாகக் கொண்டு திறமைகளைக் கருத்துள்ள முறையிற் பயிற்றுவதே பிரதான நோக்கமாகும். இந் நோக்கத்தால் பிள்ளைகளும் நாமும் அடையக்கூடிய பயன்களோ பல.

இப் பாடவிதானம் உற்பத்திக்கு உதவும் பொருள்கள், அப் பொருள்களின் பல்வகைப் பண்புகள் (நிறம், பாரம், வன்மை முதலியன). அவற்றை உருவாக்க உபயோகிக்கும் கருவிகள், கருவிகளைக் கையாளும் விதம் பற்றியெல்லாம் உறுதியான அறிவையூட்டும்.

மேலும், வெறுவெளி, கேத்திர கணிதம் என்பனபற்றி மாணவருக்குள்ள கருத்துக்களை ஆழமாக்கவும் உயிர்ப்புடையதாக்கவும் இப் பாடம் உதவும். கணிதம், விஞ்ஞானம், ஓவியம் முதலிய பாடங்களிற் பெறும் அறிவினைப் பிரயோகிப்பதற்கும் மாணவர்கள் பழகிக்கொள்வர். கருவிகளைக் கையாளும் திறன்மட்டுமன்றி, மாணவர்கள் தம் வயதுக்கும் கைவன்மைக்கும் ஏற்ப, பொருள்களை உருவாக்கும் திறமையையும் பெறுதல் கூடும். உருவாக்கும் பொருள்களை விற்று ஊதியம் பெறவும் வாய்ப்புண்டு.

இப் பாடம் 'உழைப்புப் பண்பாடு' ஒன்றை வளர்க்கவும் வகை செய்யும். தாம் வேலை செய்யும் இடத்தைச் சுத்தமாகவும் அழகாகவும், பேணுதல், வேலைக்



கென எடுக்கும் பொருள்களையும் கருவிகளையும் முறையாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருத்தல், பொருள்களை வீணாக்காது அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தல், தம்மால் இயன்றளவு உயரிய உற்பத்தி நிலையை அடையும் வகையில் உழைத்தல் என்பன 'உழைப்புப் பண்பாட்டின்' சில பண்புகளாகும். விமரிசனப் பாங்கிலும் பலன்தரும் வகையிலும் (1) வேலை செய்யவும் (2) காலத்தை வீணாக்காதிருக்கவும் (3) வேலைகளை முன்கூட்டியே திட்டமிடவும் (4) முக்கியத்துவ வரிசைப்படி கருமம் ஆற்றவும் (5) எப்பொழுதும் சரிபிழை பார்க்கவும் (6) சரள கணிப்புகளைப் பயன்படுத்தவும் மாணவர் பழகுவர். உழைப்பொழுக்க விதிகள், ஆரோக்கியம், சுத்தம் என்பனவற்றின் அவசியம், முன்னவதான ஏற்பாடுகள் செய்தல் என்பவற்றிலும் மாணவர் பயிற்சி பெறுவர்.

தொழில் முன்னிலைப் படிப்பு மாணவரின் ஆளுமை வளர்ச்சிக்கேற்ற சூழலை விருத்தி செய்யவும் உதவியாக இருக்கும். சுறுசுறுப்பு, ஆவல், தன்னம்பிக்கை, இடையூறுகளைச் சமாளிக்கும் வல்லமை, செம்மைப்பாடு, அவதானம் முதலிய உறுதியான இயல்புகள் செய்முறைப் படிப்புவாயிலாக வளர்க்கப்படும். உழைப்பை மதிக்கவும் உழைப்பில் ஈடுபடும் தம் குழுவினரையும் உழைப்பு உற்பத்தியையும் மதிக்கவும் கூட்டாகச் சேர்ந்து கூட்டத்தின்பொருட்டு உழைக்கவும் மாணவர் படிப்படியாகப் பழகிக்கொள்வர்.

அவ்வப் பிரதேசங்களுக்குரிய பிரதான தொழில்களைப் பற்றிப் படிக்கும்போது, பிள்ளைகளுக்கும் சமுதாயத்துக்குமிடையேயுள்ள தொடர்புகளும் வளர்க்கப்படும். பிரதேசத் தொழிற் கல்வியால் உள்ளூரின் பிரதான தொழிலாளரின் கைவன்மையும் அறிவும் அனுபவமும் வளரும் மாணவருக்குப் பயன்படும். உள்ளூர்களில் எத்தனையோ பல சிறு தொழில்கள் நடைபெறுகின்றன. இவற்றை வளர்க்கும் பொருட்டு இவைபற்றி விஞ்ஞான முறையான ஆராய்ச்சி எதுவும் நடாத்தப்பட்டிருப்பதாகத் தோன்றவில்லை. இப் பிரதேசத் தொழிற் கல்வி உள்ளூர்த் தொழில்கள்பற்றிய அறிவையும் செயல்முறையும் ஊட்டுவதுடன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை விஞ்ஞானவழி ஆராய்ச்சி செய்யவும் பிள்ளைகளை ஊக்கும்.

இவ்விதம் தொழில் முன்னிலைக் கல்வி மாணவர்களை நாட்டுக்குகந்தவர்களாகத் தயார் செய்ய விருக்கின்றது. நாட்டை உறிஞ்சுவதை விடுத்து அதனை அபிவிருத்தி செய்யத் தூண்டுகிறது. நாட்டின் விருத்திக்குத் தேவையான அறிவையும் ஆற்றலையும் மனப்பாங்கையும் வளர்க்க விருக்கின்றறு. உழைப்பின் மகத்துவத்தை உணர்த்தித் தன்னம்பிக்கையை வளர்த்து மாணவர்களை உன்னதமான பயனுள்ள பிரசைகளாக்க விருக்கின்றது.

இக் கல்வியினுல் எதிர்காலத்திற் சிறு தொழில்களும் வளரும்; தொழில் வாய்ப்புகள் பெருகும்; பொருளாதாரம் வளம்பெறும்; நாடு நலம்பெறும்.

---

## அறிவித்தல்

முஸ்லீம் மாணவர்கள் விடுமுறையில் நின்றபடியினுல்

பொது அறிவுப் போட்டி இல. 5 இல்

பலர் பங்குபற்ற முடியவில்லையென அறிவித்ததற்கிணங்க போட்டி முடிவு திகதி பின்போடப்படுகின்றது.

**முடிவு திகதி 25-12-72 ஆகும்.**

போட்டி இல. 5 1972 ஐப்பசி மாத வெற்றிமணியில் உண்டு.

— *ஆசிரியர்*




சிறுகதை

## பதட்டம் ஏற்படுத்திய இன்பம்

சூ. சேகர் டொணல்ட், நாவற்காடு, மாம்புரி.

ஒரு ஊரிலே ஒரு வறிய கிழவனும் அவனது மனைவியும் வாழ்க்கை நடாத்தி வந்தனர். கிழவன் பெயர் ''மாசல் வீமன்'' மனைவி பெயர் ''குந்திநாச்சம்மாள்'' இவர்கள் வீதிக்குத் தார்போடுவதே தங்கள் தொழிலாகக் கருதி மிகவும் கஷ்டத்துடன் நடாத்தி வந்தனர்.

ஒருநாள் கிழவி தன் கணவனை நோக்கி ''அன்பு நேசங்கொண்ட என் கணவரே எனக்கு ஒரு வைக்கோலினுல் கன்றுக்குட்டி செய்து தாரும்'' என்று கேட்டாள். அவன் அதை முடியாது என்று மறுத்தும் கிழவியின் பதட்டத்தைத் தாங்க முடியாமல் வைக்கோலினுல் ஒரு கன்றுக்குட்டி செய்து அதற்குத் தார்பூசி ''மா. குந்'' என்ற குறியிட்டுக் கொண்டுவந்து கிழவியின் கையில் கொடுத்தார். கிழவி அதைச் சந்தோஷத்துடன் வாங்கி அதற்கு ஒரு குடிசை அமைத்து அதற்குள்ளே கட்டிவைத்தாள். இவ்வாறு வாழ்ந்து வரும்போது ஒருநாள் கன்றுக்குட்டியையும் நெசவு ராட்டினத்தையும் எடுத்துக்கொண்டு சென்று ஒரு மலைக் குன்றின்மேல் வைக்கோல்கன்றை மேய விட்டுவிட்டு ராட்டினத்திலே ஆடை நெசவு செய்து கொண்டிருந்தாள். அப்போது அவள் அயர்ந்து தூங்கி விட்டாள்.

குன்றின்மேலே நிற்கும் கன்றுக்குட்டியை ஒரு கரடி கண்டது. கிட்டே சென்று யார் நீ? என்றது. அதற்குக் கன்று 'நான் தாரினுலே செய்யப்பட்ட கன்றுக்குட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை ஒன்றும் செய்யாதீர்கள்' என்றது. கரடி அப்படியானல் என்னை நாய் கடித்துவிட்டது. எனக்குக் கொஞ்சம் தார் கொடு என்றது. அப்படியானல் என்னைக் கடித்து எடுத்துக்கொள்ளுங்கள் என்றது. கரடி உடனே பாய்ந்து கடித்தது. தாரானபடியால் அதிலே ஒட்டிக் கொண்டு திண்டாடியது. கிழவி திடுக்கிட் டெழுந்து பார்த்தாள். ஒன்றும் செய்ய முடியாமையால் கணவனைக் கூட்டிக்கொண்டு வந்தாள். கணவன் அதைப் பிடித்து ஒரு அறையிலே அடைத்தான். சற்று நேரத்தின்பின் அவ் வழியே ஒரு நரி வந்தது. யார் நீ? என்று கன்றிடம் கேட்டது. நான் தாரினுலே செய்யப்பட்டேன் என்றது. அப்படியானல் என்னை நாய் கடித்துவிட்டது. எனக்குக் கொஞ்சம் தார் கொடு என்றது நரி. அப்படியானல் எடுத்துக்கொள்ளுங்கள் என்றது. உடனே நரி பாய்ந்தது. தாரிலே ஒட்டிக்கொண்டு சத்தம் செய்தது. உடனே கிழவி கணவனிடம் சொன்னுள். கணவன் அதைப் பிடித்து அந்த அறையிலே அடைத்தான். ஒருநாள் கிழவன் அவற்றைக் கொல்லுவதற்காகக் கத்தியைத் தீட்டிக்கொண்டிருந்தான். நரியும் கரடியும் பயத்துடன் ஐயா எங்களைக் கொல்லவேண்டாம். நான் தேன் கொண்டாறேன். கோழிக்குஞ்சு கொண்டாறேன் எங்களை விட்டுவிடுங்கள் என்றன. கிழவனும் நம்பி விட்டுவிட்டான்.

அடுத்தநாட் காலை 5 மணியளவில் கிழவனும் கிழவியும் உறங்கிக் கொண்டிருக்கும்போது கதவில் யாரோ தட்டினுர்கள். கிழவனும் கிழவியும் திடுக்கிட்டுக் கத்தியும் கம்புடனும் வெளியே வந்தார்கள். கரடி ஒருபெட்டி தேனும் நரி கோழிக்குஞ்சுடன் கூட்டையும் கொண்டு வந்து கொடுத்தன. கிழவனும் கிழவியும் அவற்றை வாங்கிச் சந்தோஷமாக வாழ்ந்தார்கள், கிழவியின் பதட்டல் இப்போது கிழவனுக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தது.

* *
* *

பாடசாலை மாதிரி நாடகம்

# "சூழ்ச்சி பலித்தது."

எம். எஸ். ஸ்ரீதயாளன்,
நாவற்காடு அ. த. வித்தியாசாலை, மாம்புரி.

## காட்சி 1

இடம்: அயோத்தியாபுரி தசரதமன்னன் அரச மாளிகை

பாத்திரங்கள்: தசரத மன்னன், குலகுரு வசிட்ட மகாரிஷி, ஸ்ரீ இராமன், சுமந்திரன், மந்திரி பிரதானிகள், சேவகர்கள், சபை, நாட்டியமகளிர் இருவர், கொற்றக் குடை பிடிப்பவர், சாமரை வீசுவோர்.

அயோத்தி மாநகரச் சக்கரவர்த்தி ஸ்ரீ தசரத வேந்தன் அரசு ஏற்று இன்றுடன் ஆண்டுகள் அறுபதாகிறது. மன்னன் அரச கட்டிலில் இருக்க வசிட்டரும் மந்திரி பிரதானிகளும் மற்றையோரும் சபையில் அமர்ந்திருக்கின்றனர். அருமையான நடன நிகழ்ச்சி ஒன்று நடைபெறுகிறது. சபையில் இரண்டு நடன ரமணிகள்...

''வாழ்கவே! விண்ணவரும் மண்ணவரும் போற்றிடும் மாமன்னு!

[பக்த பிரகலதா படத்தில் அமைந்த காட்சியிலுள்ளதுபோன்ற பாடலுக்கு நடனம்] நடனம் முடிவுறுகிறது.

வசிட்டர்:- அயோத்தியாபுரி மாமன்னன்!

சகலரும்:- வாழ்க!

வசிட்:- தசரதச் சக்கரவர்த்தி...

சகல:- வாழ்க!!

வசிட்:- மூவுலகும் போற்றும் தலைவன்...

சகல:- வாழ்க!!

(தசரதன் எழுகின்ருன்)

தசரதன்:- முறை திறம்பாமல் நம் முன்னேர் ஆண்டுவந்த மாநிலத்தை யானும் இதுகாறும் அறநெறி வழுவாமல் காத்து வந்தேன். இதற்கு பேரறிவும், பேராற்றலும் உள்ள நீங்களெல்லீரும் பேருதவி புரிந்தீர்கள். எனக்கும் என் நண்பர்களுக்கும் பகையாய் நின்றவரை வேரோடும் போக்கி, வலியோடு விளங்கிய என்னை ஒரு குறை வருத்துகிறது... இல்லையில்லை... உறுத்துகிறது. இந்த அயோத்தியாபுரியிலே நான் அரசு பூண்டு இன்று ஆண்டுகள் அறுபதாகிறது. மூப்படைந்த யான் இன்னும் அரசாள்வதைத் தவிர்த்து தவஞ்செய்ய ஆசைப்படுகிறேன். எல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாச் சிறப்பும் பொருந்திய ஸ்ரீ இராமனை என் மூத்த மகனாய்ப் பெற்றேன். பல மாட்சிமைகளையுமுடைய ஜானகியின் கணவனாகவும் என் உயிரினிய புதல்வனைக் கண்டு களித்தேன். அவனுக்கு முடிசூட்டி இந்த மாநில மன்னனாகக் காண ஆசைப்படுகிறேன்.... அறிவுக் கடலான அவைப்புலவர்களே! அமைச்சர் பிரதானிகளே! பிரஜைகளே! உங்கள் கருத்தென்னவோ?

**புலவர்கள் + மந்திரி பிரதானிகள் + பிரஜைகள்:-** மகாராஜா!

*[சபையில் கலகலப்பு]*

**வசிட்:-** மூவுலகும் போற்றும் முடிவேந்தே! தசரதமன்னா! உன் சொல் எங்கள் எல்லோருக்கும் வருத்தத்தை விளைவித்தது. உன் குடைக்கீழ் வாழ்ந்த எங்களில் யாவருக்கேனும் குறையேதும் இருந்ததுண்டோ? சக்கரவர்த்தியே! நீ முத்தி நெறி தேட வேண்டுமென்கிறாய்! மன்னுயிரைத் தன்னுயிர்போல் ஓம்பும் அரசனுக்கு முத்திதானே கிட்டாதோ? முத்தியும் தேடவேண்டிய பொருளா? ஆயினும் அரசே நீ மூப்பால் வருந்துகிறேன் என்கிறாய்... நீ வருந்த யாம் பார்த்திருத்தல் எமக்கழகன்று. ஆயின் நீ இனி அரச பாரத்தை இறக்கலாம்... உன் மகன் இராமன் உன்னிடம் அரசு பெறுவதற்கு எவ் வகையாலும் உரியவன்...

*[தசரதன் தன் மகிழ்ச்சிப் பிரவாகத்தினால் தன்னையே மறந்து நிற்கிறான். வசிட்டர் தன் பேச்சைத தொடருகிறார்]*

சக்கரவர்த்தியே! கேள்... அறத்தின் வடிவமாகத் திகழுகின்ற ஸ்ரீஇராமன் அயோத்தியின் மன்னனாவதை மாநிலத்தோர் தாமுண்ணும் சோற்றினும், பருகும் நீரினும் மேலாகப் போற்றுவர். உனக்குப் பின் இந்தக் கோசலாபுரியைச் ஸ்ரீஇராமன ஆள்வதே எங்கள் விருப்பம்!

**சுமந்திரன், மந்திரி முதலானோரும், சபையோரும்:-** ஆமாம் மன்னர் மன்னவா! வசிட்ட மகாபிதா கூறியதே சாலச்சிறந்தது. இதுவே நம் எல்லோருடைய விருப்பமும் வேந்தனே!

**தசரதன்:-** *[சிங்காசனத்திலிருந்து எழுந்து மகிழ்ச்சி பொங்கத் தன் அகன்ற மார்பிலே தன் கையை அமர்த்தி]*

ஆகாகா! நன்று நன்று! என் உள்ளத்திலே பால் வார்த்துவிட்டீர்கள். உங்கள் ஒப்புகையால் என் உள்ளம் இன்பத்தால் பொங்குகிறது. (வசிட்டரை நோக்கி) வசிட்ட மகாரிஷியே! குல குருவே! காலதாமதமின்றி என் உயிரினிய செல்வம் இராமனுக்கு கிரீடமேற்றி அரசாட்சியை ஒப்படைக்க வேண்டும். வடிமழு வாளவற் கடந்த என் மைந்தனுக்கு முடிபுனை கடிகை நாளொன்று கணித்துத் தரல்வேண்டும் பிதாவே!



**வசிட்:-** *[தன் கையிலிருக்கும் ஏடுகளைப் புரட்டி நோக்கி புன்னகைத்து]* தசரதா! நாள் கணிக்கவா? இதோ... இதோ இருக்கிறதே... நாளையே சுபதினம்தானே... நாளையே உன் மகன் இராமச்சந்திரனுக்கு நீ முடி சூட்டலாம்...

**தசர:-** (குரலை உயர்த்தி) மகிழ்ச்சி! மிக்க மகிழ்ச்சி! (சற்றுத் திரும்பிக் கைதட்டி) யாரங்கே!

*(சேவகர்கள் விரைந்து வந்து சிரம் தாழ்த்தி ஏவல் கேட்டு நிற்றல்)*

விரைந்து சென்று ஸ்ரீஇராமனை அழைத்து வாருங்கள்!

**சேவகர்கள்:-** ஆகட்டும் அரசே, இதோ... (செல்கிறார்கள்)

*[இராமன் அழைத்து வரப்படுகிறான். வணங்கிய கரங்களுடன் தந்தை தசரத ராஜனை நோக்கிச் செல்கிறான்]*

**தசர:-** மகனே! வந்துவிட்டாயா? எங்கே இப்படி...
*(அரவணைத்தல்)*

**இராமன்:-** அப்பா! தாங்கள் அழைப்பதாகவும், விரைந்து வருமாறும் சேவகர்கள் கூறினார்கள். இதோ வந்துவிட்டேன். ஏனப்பா?

**தசர:-** மகனே! இராமச்சந்திரா! நானும் வசிட்ட பிதாவும் இங்குள்ள மந்திரி பிரதானிகளும், யாவரும் தீர்க்காலோசித்து நல்லதொரு முடிவுக்கு வந்துள்ளோம். அந்த முடிவை உனக்கு அறிவிக்கவே உன்னை இங்கு அழைத்தோம்.

**இரா:-** அவ்வளவு முக்கியமான விடயம் ஏது அப்பா? சொல்லுங்கள்! அதற்கு என்னாலாகவேண்டியது என்ன தந்தையே?

**தசர:-** சொல்கிறேன் செல்வமே! நான் உன் அப்பா. அரசாண்டு இன்றுடன் அறுபது ஆண்டுகள் கழிந்துவிட்டன. (இருமல் செருமலுடன்) எனக்கோ வயது கடந்துவிட்டது. முதுமை என்னை நாடிவிட்டதை நீயறிவாய். முன்போல அரசியலை நடத்த எனக்கியலவில்லை. ஆகவே இவ்வரசைத் துறத்தல் வேண்டும். எனக்குப்பின் கோசல நாட்டை ஆள உரிமையும் தகுதியும் உடையவன் நீயே என்பது எங்கள் எல்லோருக்கும் ஏக அபிப்பிராயம். மைந்தா! நாளை சுபதினம். அதிலே உன்னை முடி சூட்டி இந்த அயோத்தியாபுரியின் அரசனாக்கிக் கண்டு கண்குளிர விரும்புகிறேன்... உன் கருத்து என்ன?

**இரா:-** (உணர்ச்சி பொங்க கை குவித்து) அப்பா! அப்பா!! யாது செய்தீர்கள்? ஐயன்மின் என் கருத்து என்னவென்று என்னை வினவுதல் தகுமோ? சிறியேனுக்கும் கருத்தொன்றுண்டோ? எந்தையாரும், என் குருநாதரும், மந்திரி பிரதானிகளும் தீர்க்காலோசித்து அபிப்பிராயம் கொண்டு எனக்குக் கட்டளையிடும் போது நான் செய்வது வேறொன்றுண்டோ? அரசியலை நடாத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதியற்றவனுனுலும் தந்தையின் தூண்டுதலும், பெரியோரின் அறிவுரைகளுமிருக்க என்ருலியன்ற மட்டும் எனக்கிடப்பட்ட பணியைச் செய்கிறேன். தங்கள் சித்தமே என் கருத்தும் தந்தையே.

தசர:- ஆகாஹா... ஆகாஹா... என் செல்வமே... என் சிந்தை குளிர்ந்தது. நாளையே ஸ்ரீ இராமனுக்குப் பட்டாபிஷேகம். நாளை ஸ்ரீ இராம பட்டாபிஷேகம்.

வசிட்டரும் சபையோரும்:- ஸ்ரீ இராமச்சந்திர மஹாராஜா வாழ்க!
ஸ்ரீ இராமச்சந்திர மஹாராஜா வாழ்க!!
ஸ்ரீ இராமச்சந்திர மஹாராஜா வாழ்க!!!

தசர:- (மறுபக்கம் திரும்பிக் கைகளைத் தட்டி) யாரங்கே?

[சேவகர்கள் வந்து வணங்கி நிற்கின்றனர்]

சேவகர்களே! என் மைந்தன் ஸ்ரீ இராமனுக்கு நாளை பட்டாபிஷேகம் என்ற நற்செய்தியை அயோத்தி நகரமெங்கும் பறைசாற்றி அறிவியுங்கள்! நகரெங்கும் அலங்கரியுங்கள்! எங்கும் இன்பநாதம் முழங்கட்டும்! எங்கும் இன்பநாதம் முழங்கட்டும்.

(தூரத்தில் 'டம்... டம்... டம்' எனப் பறையறையும் சத்தம் ஒலிக்கிறது. அதைத் தொடர்ந்து அறிவிப்போனின் குரல்...)

[திரை விழுகிறது]

— தொடரும்


## விற்பனையாளர்கள் தேவை!

வெற்றிமணி விற்பனை செய்ய

**முற்பணம்கட்டக்கூடியவிற்பனையாளர்கள் தேவை**

பிரதிக்கு 5 சதம் கமிஷன் கொடுக்கப்படும்.

**விளம்பரம்சேகரித்துக் கொடுப்பவர்களுக்கு**

20 சத. வீதக் கமிஷன் கொடுக்கப்படும்.

ஆசிரியர்


# ஒரு



# ஒரே தெய்வம்

— குரும்பசிட்டி, கே. எஸ். சிவகுமாரன் —

## 7

திடீரென மணி ஒலி நின்றுவிட்டது. அவனுக நிறுத்தவில்லை. ஆண்டவனுகவே ஓய்வுக்காக நிறுத்திவிட்டான். பாஸ்கரின் நெற்றியில் இருந்து குருதி வெள்ளம் பாய்ந்துகொண்டிருந்தது. அவ்வளவு இரத்தமும் போவதை உணர்ந்த அவனுக்கே ஆச்சரியத்தைக் கொடுத்தது. இவ்வளவு இரத்தமும் என் உடம்பில் இருந்ததா என எண்ணத் தோன்றியது. கர்ணனின் உயிர் பிரிவதற்கு அவன் செய்த தர்மம் இடம் கொடுக்கவில்லை. இங்கே அக்கா என்ற மூன்று எழுத்து உயிர் என்ற மூன்று எழுத்தைப் பிரிக்காமல் காத்துக்கொண்டிருந்தது.

பாஸ்கர் என்று கதறியபடியே ஓடிவந்தாள் — பார்த்தாள் — பர்சத்தின் சின்னத்தை — பதறினுள் — பரிதவித்தாள்.

யாரம்மா நீங்கள்? நம்ம மீனு மாதிரியே........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற தாழ்ந்த குரலில் கேட்டான்.

ஆமாம் பாஸ்கர். அதே மீனுதான். அதோடு மூன்றெழுத்தையும் சேர்த்துக்கொண்டு வந்திருக்கிறேன். பாஸ்கர் இனிமேல் நான் உனக்கு மீனு அல்லடா. என்றைக்கும் இனி மீனு அக்காடா. மீனு அக்கா!

அக்கா! அக்கா! அக்கா! எத்தனையோ தடவை அக்கா! அக்கா! என்று அலறித் துடித்திருக்கிறேனே. ஓம் என்பதற்குற்கூட ஒரு அக்கா கிடைக்கல்லையே! அக்கா! சும்மா இருக்கும்போதெல்லாம் உனக்குச் சொல்வேனே நீ அப்படி இருப்பாய்; இப்படி இருப்பாய்; சின்னக் குழந்தைகள் இருக்கும் என்று என் மனதில் உள்ள ஆசைகள் எல்லாம் சொல்லிச் சொல்லி அழுவேனே. அப்பொழுது எங்கே அக்கா போயிருந்தாய். ஏன் அக்கா! வெறும் மீனுவாகவே அப்ப இருந்திட்டாய்?

பாஸ்கர்! நான் சொல்வதைக் கேள் பாஸ்கர்,

அக்கா! அது நீங்க இட்ட பெயர் இல்லையே. இட்டவங்க தம்பீ என்ற சொந்தத்தை விட்டுவிட்டுப் போட்டாங்க. வேண்டும் என்றால் இனிமேல் அங்கே என்னை அப்படிக் கூப்பிடுங்கோ அக்கா! அதற்காகத்தான் இந்தக் குற்றுயிர் இதுவரை காத்திருக்குது.

தம்பீ! என்னை மன்னித்துக்கொள்ளடா.

அக்கா வெந்த புண்ணில் வேலைப் பாச்சாதையுங்கோ. மன்னிப்பு என்ற சொல்லே எமது சொந்தத்துக்குள் இடம் பெறப்படாது. குற்றம் இருந்தால் அல்லவோ மன்னிப்புக்கு இடம். அதுவும் அக்காவைத் தம்பி மன்னிப்பதா?

டேய் தம்பி! உலகத்தில் உள்ள எல்லா நீதிமன்றங்களிலும் மன்னிக்க முடியாத குற்றத்தை ஒரு நீதிமன்றம்தானும் மன்னிக்கும். அந்த நீதிமன்றம்தான் பெண்களின் இதயம் தம்பி. பெண்களின் இதயமாம். ஆனால் இன்றைக்குத்தான் அந்த இதயத்தை ஒரு ஆணிடத்தில் காண்கின்றேன். அதுவும் என்னுடன் பிறந்த தம்பியில் என்று பெருமைப்படுகிறேன்டா.



உன்னுடைய சொத்துக்களையெல்லாம் என் கணவர் இல்லை உன் அத்தான் அழித்துவிட்டாரே என்பதற்காகத்தான் தம்பி என்ற ஸ்தானத்தையே விட்டுக் கொடுத்திட்டேன்.

அக்கா! சொத்துக்காகச் சொந்தத்தை வித்திட்டீங்களே. இத்தனை நாளும் உன்னை உன் குடும்பத்தை கண்ணால் காண முடியாவிட்டாலும் மனதால் என்றாலும் காணவேண்டும் என்று துடித்தேன். இன்று துடிப்புக் குறைந்துவிட்டது. நாடித் துடிப்பும் குறைந்துகொண்டே போகிறது.

அக்கா! நான் பச்சைமரமாக இருந்தபோது பக்கம் எல்லாம் வறண்ட நிலத்தையே காணக்கூடியதாக இருந்தது. அப்படியிருந்தும் ஆனமட்டும் நிழல் கொடுத்தேன். இப்ப அக்கா! நான் ஒரு பட்ட மரமாகிவிட்டேன். ஆனால் இப்பொழுதுதான் என்னைச்சுற்றி நிலம் செழிப்பாக ஈரலிப்பாக இருக்கின்றது. ஆனால் அந்த ஈரலிப்பு என்னை உக்கவைக்குமே தவிர உயிர்க்க வைக்காதே அக்கா! உயிர்க்க வைக்காதே! இந்தளவு நாளும் உனக்காக வாழ்ந்தேன் அக்கா! இன்றைக்கு எனக்காக வாழ ஆசைப்படுகின்றேன். முடியவில்லையே.

நீ சின்னப்பிள்ளையாக இருக்கும்போது இல்லை அக்கா! நீங்கள் சின்னப்பிள்ளையாக இருக்கும்போது......

ஏன் தம்பி நீ என்று சொன்னாலே எனக்குத் திருப்தி தான் என்றாள் மீனு அழுதுகொண்டே.

இல்லையக்கா எனக்குத் திருப்தியில்லையே! நீங்கள் சின்னப்பிள்ளையாக இருக்கும்போது சொல்லுவது எல்லாம் ஞாபகத்துக்கு வருகுது. அடிக்கடி கேட்பீங்களே அக்கா! அப்பா மரணச் சடங்குக்குப் போட்டு வந்தால் ''யார் இறந்தது? யார் இறந்தது'' என்று. அப்பா சொல்லுவாரே ''உனக்குத் தெரியாது அது ஒரு கிழவன்'' என்று. அப்ப நீங்கள் சொல்லுவீங்களே ''எனக்குத் தெரியாதவர்கள்தான் எல்லோரும் சாகிறார்கள்'' என்று. ஆனால் அக்கா! நான் இன்றைக்குச் சாகப்போகிறேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைமட்டும் தெரியாத ஒரு கிழவன் என்று சொல்லி விடாதே அக்கா உன் பிள்ளைகளிடத்து.

தம்பீ! அப்படியெல்லாம் சொல்லாதேயடா.

இனி எப்ப மீனா நான் சொல்லப்போகிறேன்?

மீனா என்று சொல்லாதே தம்பீ! அக்காவென்று சொல்லடா.

இன்னும் எவ்வளவு நேரத்துக்குத்தான் அந்த அக்காவோட இந்தத் தம்பி உறவாட முடியும்.

ஒருநாள் உன் மகள் வேணி இல்லை என் மருமகள் வேணி என்னைச் சித்தப்பா என்று அழைத்ததற்கு அடித்தாரே அத்தான். அவர் வந்தால் சொல்லு அக்கா ஐந்து எழுத்தில் இருந்த சித்தப்பா இறக்கும்போது மூன்று எழுத்துக் குறைந்து வேணிக்கு மாமாவாக இறந்துவிட்டார் என்று. எழுத்துக்களுக்கிடையே உள்ள இடைத்தூரம் குறைந்துவிட்டது அக்கா. ஆனால் எமக்குள் உள்ள இடைததூரம்தான் கூடிக்கொண்டேயிருக்கிறது. எனக்கு ஒரு கடைசி ஆசை.

என்னுடைய மருமக்களை ஒருமுறை மாமா என்று அழைக்கச் சொல்லுங்கள் அக்கா!

ஜெயா, கிருஷ்ணா, வேணி, பாலு, ரவி, குமார் எல்லோரும் மாமா என்று கூப்பிடுங்கோ என்றாள் மீனா.

''நாங்கள் சித்தப்பாவுடன் கோபம். அவர் எங்களை மறந்துதானே தனிய வந்தவர்'' என்றாள் வேணி.

நான் இப்ப சித்தப்பாவில்லை. உன்னுடைய மாமா வேணி மாமா. இப்பொழுது கூப்பிடாவிட்டால் அந்தக் குரலை இனி எந்த ஜென்மத்திலும் கேட்க முடியாதப்பா. ஒருக்கா கூப்பிடுங்கோ.

மாமா! மாமா! உண்மையாகவே நாங்கள் கோபிக்கவில்லை. அதெல்லாம் செல்லக் கோபம்.

அக்கா! நீ... நீ... நீங்கள் எங்கே இருக்கிறீர்கள். உன்னுடைய கையைத் தா அக்கா. எனக்குப் பயமாக இருக்குது அக்கா! அக்கா! அக்......



தம்பீ! போய்விட்டாயா தம்பீ! என்னுடைய மடியிலே வளர்ந்து என்னுடைய மடியிலேயே உயிரையும் விட்டுவிட்டுப் போய்விட்டாயா தம்பி. தம்பீ! தம்பீ! ஆசையாகக் கூப்பிட்டு மகிழ்வதற்கிடையில் அப்பாவிடம் சென்றுவிட்டாயோ மகனே என்று அழைக்கும் சொல் கேட்க.

மீனா மயக்கமுற்று தம்பிமீது சரிகின்றாள்.

காணியை மீட்டுவிட்டு காரில் வந்து இறங்குகின்றார் பாஸ்கரின் அத்தான். காணியை மீட்டுவிட்டார்தான். ஆனால் கண்மணிபோன்ற மீனாவின் தம்பியை அவரால் மீட்க முடியுமா?

கோவிலினுள்ளே ஓடி வருகின்றான். அதிர்ச்சி அடைகின்றான். மீனா மயக்கம் சற்று தெளிந்து மேலே பார்க்கின்றாள்.

நா அறுந்துபோயிருந்த மணி கண்ணுக்குத் தெரிகின்றது. இனி எங்கே அந்த மணி ஒலிக்கப்போகின்றது. வேண்டும் என்றால் பாஸ்கரின் தலையில் விழுந்து அவன் தலைவிதியை நிர்ணயித்த நாவை மீண்டும் கொழுவிவிட்டால் மீண்டும் மணி ஒலியைக் கொடுக்கும். ஆனால் மீனாவின் வாழ்விலும் அந்த ஒலியைக் கொடுக்கமுடியுமா? முடியாதே!

மேலே நோக்கிய கண்கள் மூலஸ்தானத்தை நோக்குகின்றது. அந்தத் தெய்வத்தை நோக்குகின்றது. அந்தத் தெய்வத்தை இருள் மறைத்திருந்தது. ஆனால் இங்கே மணிமண்டபத்தின் ஊடாக வரும் ஒளி அவன் முகத்தை ஒரு தெய்வம்போல் பிரகாசிக்கப்பண்ணிக்கொண்டிருந்தது. இனி அந்தக் கோவிலுக்கு அவன்தான் தெய்வம். ஏன் அவள் வாழ்விலும் அவன்தான் ''ஒரே ஒரு தெய்வம்''.

''உண்மையை எக்காரணம் கொண்டும் மறைக்காதே. அது பிறர் வாழ்வையே அழித்திடக்கூடும்.

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை அரங்கம்



## வாழ்க வெற்றிமணி

— செல்வி ச. ஹிதாயா, பொறகஸ் —

ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்திடுவாய்
ஆயிரம் உள்ளம் கவர்ந்திடுவாய்
ஆயிரம் ஆசிகள் பெற்றிடுவாய்
ஆண்டவன் அருளாலே ஓங்கிடுவாய்.

★★

## வானிற் பறக்க வேண்டும்

— கதிர் —

வானிற் பறக்க வேண்டும் — நான்
வானிற் பறக்க வேண்டும்
வானிற் பறக்கும் பறவைகள் போல்
நானும் பறக்க வேண்டும்.

கிளியைப் போன்று அங்குமிங்கும்
பறந்து திரிய வேண்டும்
களிப்புடனே காலமெல்லாம்
பறந்து வாழ வேண்டும்.

குருவி போலக் குளிர்ந்த காற்றில்
சுற்றித் திரிய வேண்டும்
அருவி யழகை மேலிருந்து
பார்த்து மகிழ வேண்டும்.

வானில் என்றும் சுதந்திரமாய்
நாளும் பறக்க வேண்டும்
கானல் நீரைப் போன்ற வாழ்வை
நானும் வெல்ல வேண்டும்.



## பாவத்தைப் போக்கிவிடு!

— தங்கம் —

உள்ளம் மகிழ்ந்திடும் எண்ணம் வளர்ந்திட
உன்னை நினைந்திடுவேன்! — அதில்
என்னை மறந்திடுவேன்! — பொழில்
அள்ளும் அழகினை எள்ளி நகைத்திடும்
அழகி சிரித்திடுவாய்! — இதழ்
பழகிடத் தந்திடுவாய்!

சங்கத் தமிழினில் தங்கும் கவிகளை
தந்தெனை உய்த்திடுவாய்! — என்றும்
நிந்தனை தீய்த்திடுவாய்! — அந்த
வங்கக் கடலினில் தங்கிடும் முத்தைப்போல்
வண்மையை ஈந்திடுவாய்! — எந்தன்
நன்மையை ஒலித்திடுவாய்!

தேயிலை செழித்திடும் சிங்களத் தீவினை
செல்வம் கொழிக்கவைத்தாய்! - என்றும்
தேனும் வளத்தைத்தந்தாய்! — எளின்
மாய்ந்திடும் எந்தன் மாயமாம் வாழ்வினில்
மலரினைத் தூவிடுவாய் — கொடும்
அலரினை நீக்கிடுவாய்!

தத்தித் தவழ்ந்திடும் முத்தமிழ் அன்னையே
தாகத்தைத் தீர்த்துவிடு — எந்தன்
பாவத்தைப் போக்கிவிடு — உந்தன்
முத்தின் முகத்தினை முழுநில வொழியாக
முத்திரை காட்டிவிடு! — இன்றேல்
நித்திரை தேக்கிவிடு!

## அடிக்கல்

— சிவம், கோப்பாய் —

இன்று நான் செய்பவை மிகமிகச் சிறியவை
என்று நான் அறிகுவேன் — ஆயினும்
நன்று நான் நாளைய நாட்களில் செய்பவைக்(கு)
இன்றைய செயல்களே — அடிக்கல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லாஹ்வே

ஜூ. அ: ஜமால் முகம்மது,
அல்மனூர் ம. வி., மருதமுனை -1

அளவற்ற அருளாளன்
அனைவர்க்கும் துணையாளன்
வளமுற்ற பொருளாள்ளன்
வல்லோனே அல்லாஹ்வே.

அறிஞர்தம் அறிவினிலே
அவர்காட்டும் நெறியினிலே
அறிவுசெய்யும் பாட்டினிலே
அழகூட்டும் அல்லாஹ்வே.

அணுவினுக்குள் பெருஞ்சக்தி
சுகமாக வைத்தியக்கி
அணுகுதற்கு வழிதந்த
அகிலத்தின் அல்லாஹ்வே.

தூதர்களை உலகிற்கு
தூதுரைக்கத் தான்பணித்து
வேதத்தை தந்துதவும்
வேந்தர்கோன் அல்லாஹ்வே.

உன்னுடைய அடியாரின்
உள்ளத்தில் ஊற்றெடுக்கும்
இன்பத்தின் பெருக்காலே
இசைக்கின்றோம் அல்லாஹ்வே.

★★



# பங்குடைமை அறிமுகம் (13)

வை, சி. சிவஞானம்

நன்மதிப்புக் கணக்கு

| | |
|---|---|
| பாலு மூலதனம் | 3000 |

பாலு மூலதனக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| வங்கியில் | 24000 | மீதி | 20000 |
| | | மறுபடி விலை மதித்த கணக்கால் | 1000 |
| | | நன்மதிப்பால் | 3000 |
| | 24000 | | 24000 |

வங்கிக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 32000 | பாலு மூலதனக் கணக்கால் | 24000 |
| | | மீதி | 8000 |
| | 32000 | | 32000 |

இராசா, இராமு என்னும் பங்காளரின் 1-6-72ஆம் திகதியன்றுள்ள ஐந்தொகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூலதனம் | | | நன்மதிப்பு | | 3000 |
| இராசா | 63000 | | நிலக் கட்டிடம் | | 70000 |
| இராமு | 42000 | | தளபாடம் | | 8000 |
| | | 105000 | இருப்பு | | 28500 |
| கடன்கொடுத்தோர் | | 20000 | கடன்பட்டோர் | 7500 | |
| | | | கழி அ. மு. க. ஒதுக் | 500 | 7000 |
| | | | வங்கி | | 8000 |
| | | | காசு | | 500 |
| | | 125000 | | | 125000 |

**உதாரணக் கணக்கு**

மேற்படி கணக்கில் விலகும் பங்காளனுக்குக் கொடுத்த நன் மதிப்புத் தொகை இருக்கும் பங்காளர் தமது மூலதனத்தைக் கொண்டு பதிவழித்தனர் எனக்கொண்டு கணக்குகளைச் செய்க.

**உதாரண விளக்கம் 24**

நாட்குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| இராசா மூலதனக் கணக்கு | Dr.( ) | 1800 | |
| இராமு மூலதனக் கணக்கு | Dr.( ) | 1200 | |
| நன்மதிப்புக் கணக்கு | Cr.( ) | | 3000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரேட்டுக் கணக்கு

மூலதனக் கணக்கு

| | இராசா | இராமு | | இராசா | இராமு |
|---|---|---|---|---|---|
| நன்மதிப்பு | 1800 | 1200 | மீதி | 60000 | 40000 |
| மீதி | 61200 | 40800 | மறுபதிவில் | 3000 | 2000 |
| | 63000 | 42000 | | 63000 | 42000 |

நன்மதிப்புக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| பாலு | 3000 | இராசா | 1800 |
| | | இராமு | 1200 |
| | 3000 | | 3000 |

இராசா, இராமு என்னும் பங்காளரின் 1-6-72ஆம் திகதியன்றுள்ள ஐந்தொகை

| கடன்கள் | | | சொத்துக்கள் | | |
|---|---|---|---|---|---|
| மூலதனம் | | | நிலம் கட்டடம் | | 70000 |
| இராசா | 61200 | | தளபாடம் | | 8000 |
| இராமு | 40800 | 102000 | இருப்பு | | 28500 |
| கடன்கொடுத்தோர் | | 20000 | கடன்பட்டோர் | 7500 | |
| | | | கழி: ஒதுக்கம் | 500 | 7000 |
| | | | வங்கி | | 8000 |
| | | | காசு | | 500 |
| | | 122000 | | | 122000 |

உதாரணக் கணக்கு

மேற்படி கணக்கில் விலகும் பங்காளனுக்குரிய தொகையில் 8000 ரூபா உடனும் மீதியை 4 வருடங்களில் சம பங்குகளாக 5 வீத வட்டியுடன் கொடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இதற்குரிய நாட் குறிப்புக்களைத் தருக.

உதாரண விளக்கம் 25

| | | | |
|---|---|---|---|
| பாலு மூலதனக் கணக்கு | Dr.( | ) 24000 | |
| பாலு கடன்கணக்கு | | Cr.( ) | 24000 |
| பாலு கடன் கணக்கு | Dr.( | ) 8000 | |
| வங்கிக் கணக்கு | | Cr.( ) | 8000 |

1 ம் வருட முடிவில்

| | | | |
|---|---|---|---|
| வட்டிக் கணக்கு | Dr.( | ) 800 | |
| பாலு கடன் கணக்கு | | Cr.( ) | 800 |
| பாலு கடன் கணக்கு | Dr.( | ) 4800 | |
| வங்கிக் கணக்கு | | Cr.( ) | 4800 |



2 ம் வருட முடிவில்

| | | | |
|---|---|---|---|
| வட்டிக் கணக்கு | Dr.( | ) 600 | |
| பாலு கடன் கணக்கு | | Cr.( ) | 600 |
| பாலு கடன் கணக்கு | Dr.( | ) 4600 | |
| வங்கிக் கணக்கு | | Cr.( ) | 4600 |

3 ம் வருட முடிவில்

| | | | |
|---|---|---|---|
| வட்டிக் கணக்கு | Dr.( | ) 400 | |
| பாலு கடன் கணக்கு | | Cr.( ) | 400 |
| பாலு கடன் கணக்கு | Dr.( | ) 4400 | |
| வங்கிக் கணக்கு | | Cr.( ) | 4400 |

4 ம் வருட முடிவில்

| | | | |
|---|---|---|---|
| வட்டிக் கணக்கு | Dr.( | ) 200 | |
| பாலு கடன் கணக்கு | | Cr.( ) | 200 |
| பாலுடன் கடன் கணக்கு | Dr.( | ) 4200 | |
| வங்கிக் கணக்கு | | Cr.( ) | 4200 |

உதாரணக் கணக்கு

மேற்படி கணக்கில் விலகும் பங்காளனுகிய பாலு இறந்தாரெனக் கொண்டு கணக்குகளைச் செய்க.

உதாரண விளக்கம் 26

நாட்குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| பாலு மூலதனக் கணக்கு | Dr.( | ) 24000 | |
| பாலு தத்துவகாரர் கணக்கு | | Cr.( ) | 24000 |
| பாலு தத்துவகாரர் கணக்கு | Dr.( | ) 24000 | |
| வங்கிக் கணக்கு | | Cr.( ) | 24000 |

பேரேடு

பாலு மூலதனக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| பாலு தத்துவகாரர் கணக்கு | 24000 | மீதி | 20000 |
| | | நன்மதிப்பு | 3000 |
| | | மறுபடி விலைமதித்தல் | 1000 |
| | 24000 | | 24000 |

பாலு தத்துவகாரர் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| வங்கியில் | 24000 | மூலதனக் கணக்கில் | 24000 |
| | 24000 | | 24000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு

தத்துவகாரர் கணக்கு உடன் தீர்க்கப்படாது பகுதி பகுதியாகவும் தீர்க்கப்படலாம். அப்படித் தீர்க்கப்பட்டால் தத்துவகாரர் கடன் கணக்கில் பதிந்து வட்டியுங் கூட்டிப் பகுதி பகுதியாகவும் கொடுக்கலாம்.

## எலியற் — எலியற் (1911) வழக்குத் தீர்ப்பு

இவ் வழக்குத் தீர்ப்பின்படி விலகும் பங்காளனுக்குக் கொடுக்க வேண்டிய தொகை பங்குடைமைத் தாபனத்தின் கொடுகடனுகக் கருதப்படலாகாது. அத்தொகை ஒவ்வொரு பங்காளனதும் சொந்தக் கொடுகடன் பொறுப்பாகும். விலகும் பங்காளனின் மூலதனத்தைத் தொடர்ந்து ஒப்பந்தப்படி ஒப்பந்தமில்லாவிடின் இலாப நட்டத்தைப் பிரிக்கும் வீதத்தில் கொள்முதல் செய்தல் வேண்டும். விலகும் பங்காளனுடைய மூலதனக் கணக்கு மீதி தொடர்ந்து இருக்கும் பங்காளர்களுடைய மூலதனக் கணக்குகளுக்கு மாற்றப்படும். கொடுக்கவேண்டிய தொகையை ஒரு பங்காளன் பங்குடைமை நிலையத்திலிருந்து கொடுப்பானுயின் பங்காளர் பற்றுக் கணக்கில் அல்லது நடைமுறைக் கணக்கில் Dr. (      ) பக்கத்தில் பதியப்படும்.

உதாரணக் கணக்கு

பாபு, கோபு, வேணு என்போர் 3; 2; 1 என்ற ரீதியில் இலாப நட்டத்தைப் பங்கிடும் பங்காளர். 1-7-72 ம் திகதி அவர்களின் ஐந்தொகை பின்வருமாறிருந்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| மூலதனம் | | | நிலையான சொத்துக்கள் | 75000 |
| பாபு | 60000 | | இருப்பு | 25000 |
| கோபு | 40000 | | கடன்பட்டோர் | 15000 |
| வேணு | 20000 | 120000 | வங்கி | 10000 |
| கடன்கொடுத்தோர் | | 5000 | | |
| | | 125000 | | 125000 |

வேணு வியாபார நிலயத்திலிருந்து விலகுகிறுர். 1-7-72 ம் திகதி வியாபார நிலயத்தின் நன்மதிப்பு 9000 ரூபா எனத் தீர்மானிக்கப்பட்டது. புதிய பங்காளர்களாக பாபுவும் கோபுவும் இலாப நட்டத்தை 3; 2 என்ற வீதத்தில் பங்கிட உடன்படுகிறுர்கள். எலியற்றும் - எலியற்றும் விதியைக் கருத்திற்கொண்டு கணக்குகளைச் செய்க.

— தொடரும்

"கற்க கசடறக் கற்றவை கற்றபின்; நிற்க அதற்குத் தக"

**நந்தி** வெளியீடு : **வாழ்க்கை நூல்கள்**
ஆசிரியர் : **டொக்டர் நந்தி**

பேரன்புடையீர்!

எமது வாழ்க்கைக்கு நலனும் நம்பிக்கையும் அளிக்கும் அறிவு நூல்கள் அவசியம் தேவைப்படுகின்றன.

தாலாட்டுக்கும் ஒப்பாரிக்கும் இடையே ஒரு நீண்ட வாழ்வுண்டு. அந்த வாழ்வின் கீதம் இனிமையாகவும் அர்த்தமுள்ளதாகவும் ஒலிக்கவேண்டும். நான்கு மாதத்திற்கு ஒருமுறை ஒரு நூல் தருகிறேம்.

1973 ஜெனவரி (பொங்கல்) தொடக்கம் ஒவ்வொரு வருடமும் பொங்கல், தமிழ் புதுவருடம், தீபாவளி ஆகிய மாதங்களில் இந் நூல்கள் வெளிவரும். நந்தி நூல்களை டொக்டர் நந்தியும் பல அறிஞர்களும் எழுதுகிறுர்கள்.

நூல்கள் தரும் விஷயங்களில் சில பின்வருமாறு :

1. குழந்தை வளர்ப்பு
2. பிள்ளை வளர்ப்பு
3. படிப்பது எப்படி?
4. சிக்கன வாழ்க்கை
5. இதய வியாதிகள்
6. நடுத்தர வயதினருக்கு அறிவுரை
7. நீரிழிவு நோய்
8. இந்தக்காலப் பிள்ளைக்குச் சமயம்
9. நல்ல உணவு
10. விஞ்ஞானம் கற்பது எப்படி?

இப்படியாக

**5 நூல்களின் விலை தபால்செலவுட்பட 10-00 ரூபா**
**10 நூல்கள் 20-00 ரூபா**

உங்கள் ஆதரவு இல்லாது நாம் எமது நல்லெண்ணத்தைச் செயல்படுத்த முடியாது.

**தயவு செய்து சந்தா தந்து ஊக்கம் அளித்து நீங்களும் ஆக்கம் அடைய வேண்டுகிறேம்.**

சந்தா அனுப்பவேண்டிய விலாசம்:
SANTHI SIVAGNANASUNDRAM
10/8 A, 14th Lane,
COLOMBO - 13

நிர்வாகி
நந்தி செயற்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

நங்கையர் விரும்பும் நவநாகரீக
* நகைகளுக்கும் * வைரங்களுக்கும்
புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்
கே. என். எம்.
மீரான் சாஹிப்
— தங்கப்பவுண் நகைமாளிகை —
கன்னாதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்.

K. N. M. Meeran Sahib
JEWELLERS & DIAMOND MERCHANT
— SOVEREIGN PALACE —
Kannathiddy, *Dial:* 585 JAFFNA.

திருக்குறள்

இலங்கைக்கு முதன்முதலாக நீல சோப்பை
அறிமுகப்படுத்தியவர்கள்
மில்க்வைற் ஸ்தாபனத்தாரே.
1-7-72 தொடக்கம்
மில்க்வைற் நீல சோப் மேலுறைகளில்
திருக்குறள் அச்சிட்டு வெளிவருகின்றது.
மேலுறைகளைச் சேகரித்து,
பரிசுத் திட்டத்தில் பங்குபற்றுங்கள்.
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
தபாற் பெட்டி இல. 77
யாழ்ப்பாணம்.

இப் பிரசுரம், சக்தி அச்சகத்தினருக்காக, யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள சக்தி அச்சகத்தில், பொன். இராசரத்தினம் அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org